# குளச்சல் நகராட்சி

## 2014–2015–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் மேலாண்மையும்

**1. ஆட்சி அமைப்பு (Jurisdiction)**

குளச்சல் நகராட்சி திருவிதாங்கூர் கொச்சி மாகாணத்தில் இருந்த போது 1920–ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை நிலை எண்.85 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 22.8.1998–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் அரசாணை நிலை எண்.238 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 02.12.2008–ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

முதல்நிலை நகராட்சியில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3141/2007/OP நாள் 07.10.2008– ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொதுப் பிரிவில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் அலுவலர் வகுப்பு – IV | 1 | – | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு – IV) | 1 | – | 1 |
| 3 | உதவி கணக்கர் (வகுப்பு – V) | 1 | – | 1 |
| 4 | உதவியாளர் (வகுப்பு – IV) | 2 | – | 2 |
| 5 | இளநிலை உதவியாளர் (வகுப்பு – VII) | 8 | 3 | 5 |
| 6 | காசாளர் (வகுப்பு – VII) | 1 | – | 1 |
| 7 | தட்டச்சர் (வகுப்பு – VII) | 2 | 1 | 1 |
| 8 | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு – V) | 1 | – | 1 |
| 9 | வருவாய் உதவியாளர் (வகுப்பு – VII) | 4 | 3 | 1 |
| 10 | பொருள் காப்பாளர் (வகுப்பு – ஏ) (Store Keeper) | 1 | – | 1 |
| 11 | ஆவண எழுத்தர் | 1 | – | 1 |
| 12 | அலுவலக உதவியாளர் | 7 | 1 | 6 |
| 13 | உதவி திட்ட அமைப்பாளர் (கணனி) | 1 | – | 1 |
| 14 | புள்ளி விவர குறிப்பாளர் | 2 | 1 | 1 |
| 15 | அலுவலக இரவு காவலர் | 1 | – | 1 |
| 16 | ஓட்டுநர் | 6 | 3 | 3 |

**பொறியாளர் பிரிவில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள்**

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர் நிலை – 2 | 1 | நகராட்சிபொறியாளர் நிலை 3 | நிலையினை உயர்த்தப்பட வேண்டும். 1 |
| 2 | உ.பொ / இ.நி.பொ. | 2 | – | 2 |
| 3 | பணி ஆய்வர் | 3 | – | 3 |
| 4 | குழாய் ஆய்வர் | 2 | – | 2 |
| 5 | மின்பணியாளர் நிலை–2 | 2 | 1 | 1 |
| 6 | துலக்குநர் | 5 | – | 5 |
| 7 | மீட்டர் ரீடர் | 2 | – | 2 |
| 8 | குழாய் பொருத்துநர் நிலை– 2 | 2 | – | 2 |
| 9 | குழாய் திறப்பாளர் | 2 | – | 2 |
| 10 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் | 5 | – | 5 |
| 11 | மின்கம்பியாளர் | 2 | 1 | 1 |
| 12 | மின்கம்பி உதவியாளர் | 2 | 1 | 1 |

குளச்சல் நகராட்சியின் பரப்பளவு 5.18 சதுர கி.மீ. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23787 ஆகும். இதில் ஆண்கள் 11996, பெண்கள் 11791. மொத்த மக்கள் தொகையில் எஸ்.சி./எஸ்.டி. வகுப்பினர் எண்ணிக்கை 602 (ஆண்கள் 293, பெண்கள் 309) 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23155 ஆகும். இதில் ஆண்கள் 11770, பெண்கள் 11385.

## 2. பணி அமைப்பு (Personal)

### அ. மன்றம்

இந்நகராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 8 வார்டுகளில் 1 வார்டு எஸ்.சி. பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 16 வார்டுகள் பொதுவானவையாகும்.

| | |
|---|---|
| பொது | வார்டு எண். 3, 4, 5, 7, 8, 9, 10, 11, 12, 14, 15, 17, 18, 20, 21, 22 |
| பெண்கள் (பொது) | வார்டு எண். 1, 2, 6, 13, 16, 19, 24 |
| பெண்கள் (S.C.) | வார்டு எண். 23 |

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வருகின்றது. திரு.அ.நசீர் அவர்கள் நகர்மன்றத் தலைவராக இருந்து வருகிறார். நகர்மன்ற துணைத் தலைவராக இருந்து வந்த திரு.அ.ஜேசுராஜன் அவர்கள் காலமாகி விட்டபடியால் புதிய துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.நா.முகம்மது தாசிம் 22.01.2015–ம் தேதியிலிருந்து பதவி வகித்து வருகிறார். மொத்தம் 23 நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

| வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| | திரு. நசீர் .அ. நகர்மன்ற தலைவர் |
| 3 | திரு.நா.முகம்மது தாசிம், நகர்மன்ற துணைத்தலைவர் |

**நகர்மன்ற உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| 1 | திருமதி.விஜயராணி .றே |
| 2 | திருமதி.லதா.அ.தி |
| 3 | திரு.முகம்மது தாசிம் .நா |
| 4 | திரு.இப்ராஹீம்.அ |
| 5 | காலியிடம் |
| 6 | திருமதி. அமலபுஷ்பம். பி |
| 7 | திரு.பென்சிகர் .கி |
| 8 | திரு.குருசையா.சூ |
| 9 | திரு.பிரான்சிஸ் அமலதாஸ்.ஏ |
| 10 | திரு.ஜெஸ்டின்ராஜ் .கி |
| 11 | திரு.ஆன்றனி ராஜன்.லி |
| 12 | திரு.லாரன்ஸ் .பி |
| 13 | திருமதி. ஜான்சி .தோ |
| 14 | திரு.சூசைமரியான்.சி |
| 15 | திருமதி.சிலுவைமேரி.லே |
| 16 | திருமதி.ஷெர்லி பிளாரன்ஸ் .ச |
| 17 | திரு.முருகன்.சொ |
| 18 | திரு.சாதிக் .அ |
| 19 | திருமதி.கோமளா .அ |
| 20 | திரு.அப்துல் ரஹீம் .மு |
| 21 | திரு.நூறுமுகம்மது .மு. |
| 22 | திரு.சாகுல் ஹமீது .மு |
| 23 | திருமதி. லதா. கு |
| 24 | திருமதி. சாந்தி. ஜெ. |

**ஆணையாளர்**

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 01.04.2014 முதல் 30.07.2014 வரை திரு.மேத்யூ ஜோசப் அவர்கள் ஆணையாளராக பணியாற்றி உள்ளார். 04.07.2014 முதல் 09.02.2015 முற்பகல் வரை திரு.எஸ். சுரேஷ், நகராட்சி பொறியாளர், ஆணையாளர் (பொ) பணியாற்றி உள்ளார். 09.02.2015 பிற்பகல் முதல் திரு.ப.குருசாமி, நகராட்சி பொறியாளர், நகராட்சி ஆணையாளர் (பொ) பணியாற்றி வருகிறார்.

**3. தேர்தல்**

(1) 11–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.லி.ஆன்றனி ராஜன் என்பவர் 08.09.2014–ம் தேதியில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(2) துணைத்தலைவராக இருந்து வந்த திரு.எ.ஜேசுராஜன் இறந்து விட்டதால், புதிய துணைத் தலைவர் 22.01.2015–ம் தேதியில் மறைமுக தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு திரு.நா.முகம்மது தாசிம், துணைத்தலைவராக பதவி வகித்து வருகிறார்.

**4. நகர்மன்றக் கூட்டங்கள்**

அறிக்கையாண்டில் நகர்மன்றக்கூட்டங்கள் முறையாகவும், சீராகவும் நடைபெற்றுள்ளது. அறிக்கையாண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டுள்ள பொருள்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கூட்டத்தின் தன்மை | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | 13 | 192 |
| அவசரக்கூட்டம் | 9 | 61 |
| சிறப்புக்கூட்டம் | – | – |

**5. குழுக்கள்**

வரிமேல் முறையீட்டுக்குழு, நியமனக்குழு மற்றும் ஒப்பந்தக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குழுக்களால் அறிக்கையாண்டில் முடிவுகள் எதுவும் எடுக்கப்பட வில்லை.

திருமதி.அ.தி.லதா அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும், திருமதி.தே.விஜயராணி அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும், மற்றும் திருமதி.அ.கோமளா, திரு.அ.சாதிக், திருமதி.ஜெ.சாந்தி, திரு.சி.சூசைமரியான் ஆகியோர்கள் வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

**6. நிர்வாகம் (பொதுப்பிரிவு)**

அறிக்கையாண்டில் 01.06.2014 முதல் மேலாளர் பணியிடம் காலியாக உள்ளது.

**பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம் கீழ்வருமாறு :**

| | | |
|---|---|---|
| 1 | மேலாளர் | காலியிடம் |
| 2 | இளநிலை உதவியாளர் | 3 |
| 3 | தட்டச்சர் | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 |
| 5 | புள்ளிவிவர குறிப்பாளர் | 1 |
| 6 | வருவாய் உதவியாளர்கள் | 3 |

அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதியமாக ரூ.22,96,236/– செலவிடப்பட்டுள்ளது.

## ஆ. பொறியியல் பிரிவு

**பணியாளர்கள் விவரம்**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் நிலை–III | 1 |
| 2 | பொது;ப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3 | மின்பணியாளர் நிலை –II | 1 |

அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் உத்தேச செலவினம் ரூ. 12,54,768/–ஆகும்.

**சாலைகள், பாலங்கள் மற்றும் தோணி துறைகள்**

இந்நகராட்சிப் பகுதிக்குள் தேசிய நெடுஞ்சாலை எதுவும் இல்லை. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 37.98 கி.மீ. இந்நகராட்சி எல்கைக்குள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 17.582 கி.மீ. சாலை பராமரிப்புக்கென தனியாக பணியாளர் யாரும் இல்லை. பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றன.

| வ.எண். | சாலையின் விவரம் | 31.3.2015–ன்படி |
|---|---|---|
| 1. | சிமென்ட் சாலை | 22.60 கி.மீ. |
| 2. | கருந்தள சாலை | 5.00 கி.மீ. |
| 3. | பேவர் பிளாக் சாலை | 4.58 கி.மீ. |
| 4. | மண் சாலை | 2.10 கி.மீ |
| 5 | பிளாஸ்டிக் சாலை | 3.70 கி.மீ. |
| | **மொத்தம்** | **37.98 கி.மீ.** |

**(இ) தெருவிளக்கு**

தெருவிளக்கு பராமரிப்பில் கீழ்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1 | மின் கம்பியாளர் | 1 |
| 2 | மின்கம்பி உதவியாளர் | 1 |

இத்தலைப்பின்கீழ் அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவினம் ரூ.9,42,960/– மின்விளக்கு உபகரணங்கள் வாங்க ரூ.4,45,562/– செலவு செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணமாக ரூ.81,64,172/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | விளக்குகள் விவரம் | 1.4.2014–ல் உள்ளபடி | நீக்கம் | சேர்க்கை | 31.3.2015–ல் உள்ளபடி |
|---|---|---|---|---|---|
| 1 | உயர்கோபுர மின் விளக்கு | 1 | – | – | 1 |
| 2 | சிறிய உயர்கோபுர மின் விளக்கு | 4 | – | – | 4 |
| 2 | சோடியம் ஆவிவிளக்கு | 32 | – | – | 32 |
| 3 | 40 வால்ட் குழல் விளக்கு | 1236 | – | – | 1236 |
| | மற்றவை | 9 | – | – | 9 |
| 4 | CFL விளக்கு | 185 | – | – | 185 |
| 5 | LED விளக்கு | 70 | – | – | 70 |

அ) இந்நகராட்சிப் பகுதியில் பெரிய பாலங்கள் எதுவுமில்லை.

ஆ) அறிக்கை ஆண்டில் பெரிய பாலங்கள் எதுவும் கட்டப்படவில்லை

இ) தங்கும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்

இந்நகராட்சியில் மேற்காணும் யாவும் பராமரிக்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரால் பயணிகள் விடுதி மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றது

10. <u>தளவாடச் சாமான்கள்</u>

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காகான செலவு ரூ.43,525/– மேற்கொள்ளப்பட்டது.

11. <u>தெருவிளக்குகள்</u>

இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## III. கல்வி

12. <u>கல்வி வரி</u>

நகராட்சி எல்கைக்குள் தனியாரால் 7 பள்ளிகளும், அரசினரால் 6 பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகராட்சியின் பராமரிப்பில் பள்ளிக் கட்டிடம் எதுவும் இல்லை.

13. மாணவர்கள் எண்ணிக்கையும் திறமையும் – கேள்வி எழவில்லை

14. பயிற்றுவிக்கும் பணியாளர்கள் – கேள்வி எழவில்லை

15. இடவசதியும் சாதனங்களும் – கேள்வி எழவில்லை

16. (1) ஆரம்பப்பள்ளி – கேள்வி எழவில்லை

(2) இடைநிலைக் கல்வி – கேள்வி எழவில்லை

17. <u>பள்ளிகளின் எண்ணிக்கையும் வசதிகளும்</u>

இந்நகராட்சியின் பராமரிப்பில் மேல்நிலைப் பள்ளிகளோ, உயர்நிலைப் பள்ளிகளோ எதுவும் இல்லை.
தனியாரால் 2 மேல்நிலைப் பள்ளிகளும், அரசால் 1 உயர்நிலைப் பள்ளியும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

18. கல்வித் திறமை கேள்வி எழவில்லை

19. பணியாளர்கள் கேள்வி எழவில்லை

20. இடவசதிகள் கேள்வி எழவில்லை

21. நிதி ஆதாரம் கேள்வி எழவில்லை

**22. சிறப்புப் பள்ளிகள்**

நகராட்சியால் சிறப்புப் பள்ளி அல்லது வாசக சாலை எதுவும் பராமரிக்கப்படவில்லை. மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு பொது நூலகம் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தனியாரால் தனிப் பயிற்சி கல்லூரிகளும் **(Tutorial College)** குழந்தைகளுக்கு ஒரு கான்வென்ட் பள்ளியும் ஒரு அராபிக் கல்லூரியும் நடத்தப்பட்டு வருகின்றன.

**வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்**

வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இந்நகராட்சியில் கீழ்கண்ட 11 இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

| | |
|---|---|
| 1 | சாஸ்தாங்கரை |
| 2 | செக்காலத்தெரு |
| 3 | அஞ்சாலிவிளை |
| 4 | களிமார் |
| 5 | கொட்டில்பாடு–1 |
| 6 | கொட்டில்பாடு–2 |
| 7 | மரமடி–1 |
| 8 | மரமடி–2 |
| 9 | துறைமுகத்தெரு–1 |
| 10 | துறைமுகத்தெரு–2 |
| 11 | துறைமுகத்தெரு–3 |

அறிக்கையாண்டில் 11 குழந்தைகள் நல மையங்கள் நகராட்சி சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

**14) பள்ளி சத்துணவு மையங்கள்**

பள்ளி சத்துணவு மையங்கள் எதுவும் நகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை.

## 1. பொது சுகாதாரம்

**i) மருத்துவ நிவாரணம்**

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. ஒரு அரசு மருத்துவமனையும், ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், 10 தனியார் மருத்துவமனைகளும் நகரில் செயல்பட்டு வருகின்றன.

**ii) அமைப்பும் பணியாளர்களும்**

இந்நகராட்சியில் நகர்நல அலுவலர் பணியிடம் இல்லை.

**iii) சிறப்புத்திட்டம் – எதுவுமில்லை.**

(1) மருத்துவப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கல் – எதுவுமில்லை.

24) நோயாளிகள் – கேள்வி எழவில்லை

25) வசதிகள் – கேள்வி எழவில்லை

**26) <u>பொதுசுகாதாரப் பணியாளர்கள் விவரம்</u>**

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்கண்ட பணியிடங்கள் அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் | காலியிடம் |
| 2 | துப்புரவு ஆய்வாளர் | 1 |
| 3 | துப்புரவு மேற்பார்வையாளர் | 4 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 50 ( காலியிடம் –8) |
| 5 | மகப்பேறு உதவியாளர் | 1 |
| 6 | மகப்பேறு ஆயா | 1 |
| 7 | ஓட்டுநர்கள் | 3 |

அறிக்கையாண்டில் பொது சுகாதாரப் பிரிவில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினம் ரூ. 1,28,94,060 /– ஆகும்.

**27) <u>மகப்பேறு நிவாரணம்</u>**

இந்நகராட்சியில் மகப்பேறு உதவியாளர் ஒருவரும், ஒரு மகப்பேறு ஆயாவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

**28) <u>பிறப்பு இறப்பு விபரம் 2014–2015</u>**

| | |
|---|---|
| இறப்புகளின் எண்ணிக்கை | 165 |
| பிறப்புகளின் எண்ணிக்கை | 660 |
| இறந்து பிறந்தவை | 1 |
| சிசு மரணம் | இல்லை |
| பேறுகால இறப்பு | இல்லை |

**<u>2014–15–ல் தடுப்பு மருந்து போட்ட விவரம்</u>**

| <u>மருந்து</u> | <u>தடுப்பு மருந்து போட்ட குழந்தைகள்</u> |
|---|---|
| Hepatits – B | 210 |
| T.T. | -- |
| D.P.T. | 215 |
| Polio | 220 |
| B.C.G. | 220 |
| Measles | 230 |
| Penta | 220 |

**29. <u>சுகாதாரம்</u>**

துப்புரவுப் பணிக்கு 1 காம்பாக்டர் லாரி, 2 மினி ஆட்டோ, 1 மினி லாரி தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அ) நகர் சுகாதாரம்**

இந்நகரில் மொத்தம் 6829 கட்டிடங்கள் உள்ளன. அனைத்து வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளன. இந்நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை உப்பளம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது.

**ஆ) உணவு கலப்பட தடுப்புச் சட்டம்**

அறிக்கையாண்டில் திரு.முருகேசன், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின்கீழ் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டது.

இ) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமத்தின்கீழ் பெறப்பட்ட வருமானம் – D&O – ரூ. 1,09,875/–

ஈ) நகராட்சிப் பகுதியில் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட உள்ளாட்சி தினவிழா, அறிஞர் அண்ணா பிறந்த தினவிழா, தமிழர் திருநாள் ஆகிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**30) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம்**

இந்நகராட்சிப் பகுதியில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள 21 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து கீழ்கண்ட இடங்களில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு கிருமி நாசினி கலந்து நகரில் எல்லா பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 21 ஆழ்குழாய் கிணறுகளில் 20 ஆழ்குழாய் கிணறுகளில் 10 H,P. மோட்டார்களும், 1 ஆழ்துளைக் கிணற்றில் 5 H,P. மோட்டாரும் பொருத்தப்பட்டுள்ளன.

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் விவரம்**

| வ.எண். | அமைந்துள்ள இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | 3 லட்சம் |
| 2 | துறைமுகத்தெரு | 2 லட்சம் |
| 3 | பொட்டல் பகுதி | 2 லட்சம் |
| 4 | நகராட்சி அலுவலகம் | 7 லட்சம் |
| 5 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 6 | பர்னட்டிவிளை | 0.60 லட்சம் |
| 7 | கொட்டில்பாடு | 0.30 லட்சம் |
| 8 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி | 0.60 லட்சம் |
| 9 | சிங்காரவேலன் காலனி | 0.30 லட்சம் |
| 10 | மாதாகாலனி | 3.00 லட்சம் |
| 11 | KSSS காலனி – 2 | 3.00 லட்சம் |

இந்நகராட்சியில் 148 பொதுக்குழாய்கள் உள்ளன. 4340 தனியார் வீட்டு குடிநீர் குழாய்கள் நகராட்சி மூலம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் கட்டணம்**

அறிக்கை ஆண்டில் குடிநீர் கணக்கு தலைப்பின்கீழ் வரவு ரூ. 65.14 லட்சம், செலவு ரூ.62.94 லட்சம்.

31) <u>கழிவுநீர் வடிகால்</u>

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் எதுவும் இல்லை. மழைநீர் வடிகால் மூலம் கழிவுநீர் நகரின் மேற்கே பாம்பூரி வாய்க்காலில் கடலில் சேருமிடத்தில் கலக்கிறது. நகரில் உள்ள மழைநீர் வடிகால் நீளம் 27.05 கி. மீ.

32) <u>பொது நலமும் பாதுகாப்பும்</u>

அறிக்கையாண்டில் நாய்கள், பன்றிகள் எதுவும் அழிக்கப்படவில்லை,

33) <u>பொது</u> – இல்லை

34) <u>போக்குவரத்து</u> – இல்லை

(அ) தினசரிச் சந்தை, மீன் சந்தை, வதை சாலை, பேரூந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடம் போன்றவைகள் மூலம் கிடைத்த வருமான விவரம் பின்வருமாறு.

| தினசரிச்சந்தை | மீன்சந்தை | வதைசாலை | பேரூந்து நிலைய கட்டணம் | கட்டண கழிப்பிடம் |
|---|---|---|---|---|
| 10,48,230/– | 1,08,045/– | –– | 2,18,295/– | 1,05,896/– |

(ஆ) தினசரிச் சந்தை ஒன்றும், மீன்சந்தை ஒன்றும், பேருந்து நிலையம் 1 –ம் கட்டணக் கழிப்பிடம் 1–ம் பேணப்பட்டு பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

(இ) வண்டிப்பேட்டை – இல்லை

(எ) **பேரூந்து நிலையம்**

சி – பிரிவு பேருந்து நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது. பேருந்து நிலையம் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு ரூ. 2,18,295/– வருமானம் கிடைத்துள்ளது.

(உ) **வதை சாலை**

நகராட்சிக்கு சொந்தமான வதை சாலை – இல்லை.

(ஊ) <u>தொழில் கூடங்கள்</u>

G.O.Ms.No.192 HSUD Dept. நாள் 14.02.1991 –ன்படி உள்ள மாஸ்டர் பிளான் அமுலில் உள்ளது. 1939–ம் வருட தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 01.07.1966 முதல் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது.

35) <u>மரம் நடுதல் மற்றும் பூங்கா பராமரிப்பு</u>

அறிக்கையாண்டில் மரங்கள் எதுவும் நடப்படவில்லை.
நகராட்சிக்கு சொந்தமான பூங்கா எதுவுமில்லை.

36) <u>நில வளர்ச்சி</u>

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம்–I, II மற்றும் III ஆகியவை விளம்பரப்படுத்தப்பட உள்ளது.

(ஆ) <u>நகரமைப்பு திட்டங்கள்</u>

நகரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**(இ)** **சாலை ஓரக்கடைகள்** – இல்லை

**(ஈ)** **வரை கடப்புகள்** – அறிக்கையாண்டின் தொடக்கத்தில் 26 வரை கடப்புகள் காணப்பட்டன.

**(உ)** **இதர வருவாய் வரத்தக்க இனங்கள்** – இதர இனங்கள் எதுவுமில்லை.

## பொது வருமானம்

**38) வருவாய் இனம்**

இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

| | விவரம் | வரி |
|---|---|---|
| 1 | பொது வரியினங்கள் | 8% |
| 2 | விளக்கு வரி | 8% |
| 3 | தண்ணீர் வரி | 8% |

**சொத்துவரி**

| மண்டலம் | A முக்கிய சாலைகள் | 2.05 பைசா |
|---|---|---|
| | B பிரதானசந்திப்பு சாலைகள் | 1.05 பைசா |
| | C குடியிருப்பு பகுதிகள் | 0.75 பைசா |
| | D குடிசைப்பகுதி | 0.50 பைசா |

**38) கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு**

அறிக்கையாண்டில் 226 கட்டிடங்களுக்கு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய வரிவிதிப்புகள் மூலம் நகராட்சி வருமானம் ரூ. 2,37,950/–

**39) கேட்பு வசூல் நிலுவை**

அறிக்கையாண்டில் வரியினம் மற்றும் வரியற்ற இனத்தின்கீழ் கேட்பு வசூல் நிலுவை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| இனம் | கேட்பு 2014–15 | வசூல் | நிலுவை (ரூ.இலட்சத்தில்) | வசூல் விழுக்காடு |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 116.45 | 71.60 | 44.85 | 78 % |
| தொழில்வரி | 13.75 | 9.75 | 3.99 | 71 % |
| தண்ணீர் கட்டணம் | 39.76 | 32.80 | 6.95 | 83 % |
| வரியற்றயினம் | 32.70 | 20.98 | 11.72 | 67 % |

நூலகவரி சொத்துவரியில் 10 % என்ற கணக்கில் வசூலிக்கப்பட்டு வருகின்றது. தொழில் வரி புதிய அரசாணைப்படியும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.826 நாள் 30.01.2014–ன்படியும் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ரூ. 21,000/— வரை | இல்லை |
| ரூ. 21,001 முதல் ரூ. 30,000 வரை | ரூ. 118/— |
| ரூ.31,001 முதல் ரூ. 45,000 வரை | ரூ. 294/— |
| ரூ.45,001 முதல் ரூ. 60,000 வரை | ரூ. 586/— |
| ரூ.60,001 முதல் ரூ. 75,000 வரை | ரூ. 880/— |
| ரூ.75,001 முதல் அதற்கு மேல் | ரூ.1173/— |

40) <u>பொது</u>

இந்நகராட்சியின் பொது நிதி உட்பட பல்வேறு தலைப்புகளின்கீழ் நடைபெற்ற பணிகள் விவரம்

**2014—2015—ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்) |
|---|---|---|
| **I** | **ஐ.யு.டி.எம் — 2014—15** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பள்ளிரோடு பாலையா மார்பிள் கடை வரை 110 எம்.எம். பிவிசி குழாய் அமைக்கும் பணி செய்தல். | 7,00,000/— |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து கொட்டில்பாடு வரை 110 எம்.எம். பிவிசி குழாய் அமைக்கும் பணி செய்தல். | 6,99,172/— |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பர்னட்டிவிளை வரை 110 எம்.எம். பிவிசி குழாய் அமைக்கும் பணி செய்தல். | 7,00,000/— |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பள்ளிவிளாகம், வாய்க்கால் தெரு, வெள்ளியா குளம் வரை 110 எம்.எம். பிவிசி குழாய் அமைக்கும் பணி செய்தல். | 10,00,000/— |
| **II** | **குடிநீர் வினியோகப் பணிகள் 2014—15** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் குடிநீர் நீரேற்றும் நிலையங்களுக்கான ஒயரிங் பணிகள் செய்தல். | 75,000/— |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகில் 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான குடிநீர் குழாய் பதிக்கும் பணி செய்தல். | 6,20,246/— |
| 3 | குடிநீர் பணிகள் 20014—15 (மண்டலம்—1) வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3,50,000/— |
| 4 | குடிநீர் பணிகள் 20014—15 (மண்டலம்—2) வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3,50,000/— |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் புதியதாக குடிநீர் நீரேற்றும் நிலையம் அமைத்தல். | 3,00,000/— |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11—ல் துறைமுகத்தெரு மீன் ஏலம் போடும் தளத்தின் அருகில் உள்ள குறுக்கு தெருவில் 90 எம்.எம். பிவிசி குழாய் அமைக்கும் பணி செய்தல். | 1,38,000/— |

| | | |
|---|---|---|
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.காலனியில் ஆழ்துளை கிணற்றில் பழுதான 10 எச்.பி. மோட்டாரை தூக்கி புதிய 10 எச்.பி. மோட்டார் இறக்குதல். | 69,222/– |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை ஆழ்துளை கிணற்றில் பழுதான 10 எச்.பி.மோட்டாரை தூக்கி புதிய 10 எச்.பி. மோட்டார் இறக்குதல். | 69,222/– |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆழ்துளை கிணற்றில் பழுதான 10 எச்.பி.மோட்டாரை தூக்கி புதிய 10 எச்.பி. மோட்டார் இறக்குதல். | 69,222/– |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் புதியதாக ஆழ்துளை குடிநீர் குழாய் பதிக்கும் பணி செய்தல். | 5,00,000/– |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் முதல் தைநாத்தன்கரை வரை 90 எம்.எம். பிவிசி குழாய் அமைக்கும் பணி செய்தல். | 5,79,489/– |
| **III** | **பொது நிதி 2014–15** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு ஆர்.சி.சர்ச் முதல் ஜோசப் பெனடிக்ட் சாலை வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 9,40,000/– |
| 2 | இந் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட் எதிர்பக்க தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 2,00,000/– |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்ர் எண்.11–ல் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல். | 2,00,000/– |
| 4 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் பொட்டல்விளை குறுக்குதெருவில் றுக்ஷஆ சாலை அமைத்தல். | 2.02.872/– |
| 5 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் மாதா காலனியில் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல். | 9,10,791/– |
| 6 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் மீன்விற்பனை கூடத்திற்கு அருகில் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல். | 3,99,840/– |
| 7 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை பழைய கேஸ் ஆபீஸ் அருகில் வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல். | 1,15,001/– |
| 8 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு ஆர்.சி.சர்ச் சாலை அருகில் காங்கிரீட் சாலை மற்றும் டைல்ஸ் வேலை செய்தல். | 3,00,000/– |
| 9 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல் வடிகால் ஓடை அமைத்தல்.(Liquid waste management root Zone method) | 2.50,000/– |
| 10 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–ல் கொட்டில்பாடு கடற்கரை சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 7,94,766/– |
| 11 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9– ல் மரமடி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 2,00,000/– |
| 12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மீன்விற்கும் ஏல தளத்திற்கு வண்டிகளை ஏற்றும் வகையில் சாய்வு தளம் அமைத்தல். | 1,74,362/– |
| 13 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல். | 73,824/– |
| 14 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3–ல் சன்னதி தெரு அருகில் அம்மன்கோவில் மேற்கு பக்கம் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 2,12,040/– |

| | | |
|---|---|---|
| 15 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கனனி அறையில் 5 கே.வி.எ.யு.பி.எஸ்.100 எ.எச் டியூபுலர் பாட்டரி பொருத்துதல். | 2,11,632/– |
| 16 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் ரேசன் கடை அமைத்தல். | 3,50,000/– |
| 17 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் தீயணைப்பு நிலைய வாகனம் நிறுத்துமிடம் கட்டுதல். | 3,50,000/– |
| 18 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் துறைமுகத்தெரு எண்.1–ன் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை கட்டுதல். | 1,19,330/– |
| 19 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பொட்டல் நீர்த்தேக்க தொட்டியில் பராமரிப்பு பணி செய்தல். | 1,30,000/– |
| 20 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் குருசடி அருகில் துறைமுகத்தெரு எண்.1–ல் மீனவர் ஓய்வறை பராமரித்தல். | 1,59,309/– |
| 21 | இந்நகராட்சி பொதுப் பிரிவில் கம்யூட்டர் கேபின் அலுமினியம் பேவிரிகேசன் அமைத்தல். | 40,000/– |
| 22 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 –ல் பந்தவிளை குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 3,06,236/– |
| 23 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட் அருகில் பேவர் பிளாக் சாலை மற்றம் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 4,00,000/– |
| 24 | குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மேற்கொள்ளுதல். | 1,50,000/– |
| **IV** | **வடகிழக்கு பருவமழை 2014–15** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் தார்ச்சாலை பேச் ஒர்க் அமைத்தல் | 6,50,000/– |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் சாலை முதல் கொட்டில்பாடு சாலை வரை தார் சாலை பேச் ஒர்க் அமைத்தல். | 2,00,000/– |
| | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு எண்.1–ல் சைமன் காலனி பாலம் அருகில் தார் சாலை பேச் ஒர்க் அமைத்தல். | 1,50,000/– |
| **V** | **புராதன நகர மேம்பாட்டு திட்டம் 2014–15** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு வெற்றித்தூண் அருகில் பூங்கா அமைத்தல். | 25,00,000/– |
| **VI** | **தெருவிளக்கு பராமரித்தல் 2014–15** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மின்உபகரண பொருட்கள் வினியோகம் செய்தல். | 4,45,562/– |

41) <u>கடன்கள்</u>

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் கடன் ஆரம்ப இருப்பு | ரூ. 1,44,68,865/– |
| அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் | – |
| திரும்ப செலுத்தப்பட்ட கடன் | ரூ. 2,52,595/– |
| செலுத்தப்பட்ட வட்டி | ரூ. 26,722/– |
| **இறுதி இருப்பு** | **ரூ. 1,41,89,548/–** |

42. <u>முதலீடுகள்</u>

நகராட்சி முதலீட்டு கணக்கில் இருப்பு : –

**<u>தணிக்கை</u>**

தணிக்கை ஆண்டில் 1974 தணிக்கைத் தடைகள் இருந்தது. 118 தணிக்கைத் தடைகள் முடிவு செய்யப்பட்டது. அறிக்கை ஆண்டு முடிவில் 1856 தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளன.

43) <u>சொத்து</u>

அறிக்கை ஆண்டில் நகராட்சியின் சொத்து மதிப்பு – ரூ. 3,00,00,000/–

கடந்த ஆண்டுகளில் அரசிடமிருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. ஏற்கனவே செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை மட்டும் வட்டி சேர்த்து செலுத்தப்பட வேண்டியுள்ளது.

<u>பொது குறிப்பு</u>

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர்
குளச்சல் நகராட்சி